## பாதுகாப்பானதும் முறையானதுமான புலம்பெயர்வை ஊக்குவிப்பதற்கான IOM இனது செயற்பாடுகள்.

- பொது மக்கள், சமூகத்தலைவர்கள், மாணவர்கள் மற்றும் ஆழ்கடல் மீன் பிடி படகு உரிமையாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்.
- மீள்திரும்பல் மற்றும் மீளிணைவுக்கான திட்டத்தினூடாக வழங்கப்படும் உதவிகள்.
  - ★ தற்காலிக பிரயாண ஆவணம் வழங்குதல்.
  - ★ பயணத் துணை.
  - ★ மீள் திரும்புவோரை விமான நிலையத்தில் வரவேற்றல்.
  - ★ மீளிணைவுத் திட்ட உதவி (பணம் மற்றும் பொருள்).
  - ★ வைத்திய பரிசோதனை.
- வெளிநாடு செல்லவிருப்போருக்கான திறன் விருத்தி.
- வாழ்வாதார விருத்தியின் மூலம் சமூக மைய மீளிணைவு.
  - ★ வணிக ஆலோசனை மற்றும் கண்காணிப்பு.
  - ★ உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான உட்கட்டமைப்பு உருவாக்கம்.
- வெளிநோக்கிய புலம்பெயர்வோருக்கான பிரயாண இலகுபடுத்தல் வசதிகள்.
- கனடா, நெதர்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு புலம்பெயர்வோருக்கான நாடுகள் பற்றிய அறிமுகம்.
- நியூசிலாந்து செல்வோரின் ஆவண உறுதிப்படுத்தல்.
- ஆட்கடத்தலை அடையாளப்படுத்துதல் அதற்கான சட்டத் தீர்வு மற்றும் ஆட்கடத்தலுக்கு பலியானோருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளில் இலங்கை அரசிற்கு தொழில்நுட்ப மற்றும் புலமை சார் உதவிகளை வழங்கல்.

## பாதுகாப்பான புலம்பெயர்தல் சம்பந்தமான தகவல்களைப் பெற

### இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (SLBFE)

**011 - 2879 900**
**011 - 2879 901**
**011 - 2879 902**

### ஆட்கடத்தல் சம்பந்தமான பொலிஸ் இல.

**வான் வழி : 011 - 239 2917**
**கடல் வழி : 011 - 232 0141- 4**

### தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபை (NCPA)

**011 - 277 8911**

### நேரடி அழைப்பு – சிறுவர் பாதுகாப்பு

**1929**

### புலம் பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (IOM)

**011 - 532 5362**
**077 - 441 0086**

## பாதுகாப்பான புலம்பெயர்தல் பற்றிய மேலதிக தகவல்களுக்கு


IOM International Organization for Migration
IOM සංක්‍රමණය සඳහා වන ජාත්‍යන්තර සංවිධානය
IOM புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு

62, ஆனந்த குமாரசுவாமி வீதி (கிரீன் பாத்),
கொழும்பு 03.

தலைமை அலுவலகம்
தொலைபேசி : 011 - 532 5362
தொலைநகல் : 011 - 532 5307

யாழ்ப்பாண அலுவலகம்
தொலைபேசி : 021 - 222 8620
தொலைநகல் : 021 - 222 9681

வவுனியா அலுவலகம்
தொலைபேசி : 024 - 222 4661
தொலைநகல் : 024 - 222 0579

கிளிநொச்சி அலுவலகம்
தொலைபேசி : 024 - 324 4949
தொலைநகல் : 021 - 228 5386

மட்டக்களப்பு அலுவலகம்
தொலைபேசி : 065 - 5673400/02
தொலைநகல் : 065 - 222 6968



அனுசரணை:

Australian Government
Department of Immigration and Border Protection

Canada


# பாதுகாப்பான புலம்பெயர்வு பற்றித் தெரியுமா ?

## அது உங்களை ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றும்.



உங்கள் தாய்நாட்டை விட்டு முறையற்ற ரீதியில் வெளிநாடு செல்ல எண்ணுகின்றீர்களா?

**வரு முன் காப்போம்!**

**நீங்கள் வெளிநாடு செல்ல இருப்பவராயின் அதற்காக முறையற்ற பாதையை தெரிவு செய்தால்.**

**உயிர் ஆபத்துக்கள் ஏற்படலாம்.**



**உடமைகளை இழக்க நேரிடலாம்.**




**நீண்ட கால தொழிலின்மை காரணமாக பொருளாதர வீழ்ச்சி.**




**குடும்பம் பாதிப்புகளுக்கு உள்ளாகலாம்.**



**கனவுகள் சிதைந்து போகலாம்.**



**போதிய அறிவூட்டல் இன்மை, ஆயத்தமின்மை காரணமாக சுகாதார பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடலாம்.**



**சிறையில் அடைக்கப்படலாம்.**



# தொழிலுக்காக வெளிநாடு செல்கிறீர்களா?

1. புலம்பெயரும் நாட்டில் தொழில் புரிவதற்குத் தேவையான திறன்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.
2. வெளிநாடு செல்லமுன் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் (இ.வெ.வே.ப) உங்களை பதிவு செய்து கொள்ளுங்கள். இதன் மூலம் வைத்திய காப்புறுதி மற்றும் இதர நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும்.
3. இ.வெ.வே. பணியகத்தில் பதிவு செய்து கொண்ட வெளிநாட்டு தொழில் முகவர்களை மட்டுமே நாடுங்கள்.
4. நன்கு வாசித்து விளங்கிய பின்னரே வெளிநாட்டு தொழில் ஒப்பந்தத்தில் ஒப்பமிடுங்கள்.
5. வெளிநாட்டு பயணத்தை தொடங்கு முன்னர் உங்களின் குடும்ப வைத்தியரை அணுகி உங்களுக்கு தேவையான மருந்து மற்றும் மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுங்கள்.
6. கடவுச்சீட்டு, தொழில் ஒப்பந்தம் மற்றும் உறுதிப்படுத்தலுக்கான ஆதார ஆவணங்களின் பிரதிகளை தங்களின் குடும்பத்தினரிடம் விட்டுச்செல்லுங்கள். இது அவசர ஆபத்துக்களின் போது உதவும்.
7. அவசர ஆபத்துக்களின் போது நீங்கள் புலம்பெயர்ந்த நாட்டில் அமைந்துள்ள இலங்கை தூதரகத்தை தொடர்பு கொள்ளவும். அத்தூதரகத்தை தொடர்பு கொள்வதற்கான தகவல்களை நாட்டிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் பெற்றுச் செல்லவும்.
8. நாட்டை விட்டு புறப்படுவதற்கு முன்னர் உங்களில் தங்கி வாழ்வோரில் (மனைவி, பிள்ளைகள், பெற்றோர்) அக்கறை செலுத்துங்கள். அவர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி போன்றவற்றுக்கான முன்னேற்பாடுகளை செய்து விட்டுச் செல்லுங்கள்.